ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

06.03.2025

1. தாயும் தந்தையுமாய் அருள
தண்டாயுதப் பெருமானை வேண்டி
சேய்களாக உலக மக்களை கருதி
செய்த தானதரும தவபலமே

2. தவபலமே அரங்கமகான் என்னை
தன் சோதியுள் வேலவன் ஏற்றிட
அவதார மகா சோதி வடிவாகி
அருட்சுவடி வழி அரங்கனும் பேசுகின்றேன்

3. பேசவே குரோதி சால் திங்களில்
பேதமற சதுர் குருவார அருளாசி
ஆசியாக உலக மக்கள் தனக்கு
அரங்கனும் இதுநாளில் அருள்வேன்

4. அருளவே சன்மார்க்க நெறி வழி
அரங்கா முருகா என வந்தநல்
பேருலக மக்கள் எல்லோரும் என்
பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டேன்

5. கொண்டபடி குறைகள் ஏதுமின்றி
குருவாக தாய் தந்தையுமாக
உண்டாக்குவேன் சர்வ பாதுகாப்பை
உடனிருந்து உங்களின் உள் இருந்தும்

6. இருந்துமே தேக மன பலமாக
இயக்குவேன் வெற்றி பல அடைய
வருந்தா வறுமைகள் சூழாதபடி
வளமாக்கி வாழ்வை காப்பேன்

7. காப்பாக அவரவர் தேட்டும்
கனதன லாபங்கள் அடைய
ஒப்பு கொண்டு குருவருள் புரிவேன்
உடல் மனம் சோர்விலா இயங்கிட

8. இயங்கிட பேரருள் புரிவேன்
இனிதே ஞானவான்களாகிட
தயங்கா பிரணவக்குடில் நோக்கி
தரணியோர் வருகை புரிந்துமே

9. புரிந்துமே புண்ணிய பலம் தரும்
பிரணவக்குடில் அன்னதானமதில்
பெருந்தொகை இயன்ற வண்ணம்
பொருளுதவியாக செய்து நன்கு

10. செய்துமே சோதி வடிவாகயுள்ள
சரவண சோதியில் எனை வணங்கி
மெய்ஞானம் தரும் அருளமுது உண்டு
மேன்மை கண்ட என் சீடனாம்

11. சீடனாம் ராம்குமார் கரம்பட
சில தீட்சைகள் ஏற்று நன்கு
தடையற வழிபாடுகள் புரியவே
தரணியோர் எல்லாம் தவசிகள் ஆவரப்பா
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி